(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 11 (3).]

# பாராளுமன்றம்

## 11 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2014 மே 23 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2014 யூன் 03, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சரும்,— கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2014 மார்ச்சு 14 ஆம் திகதிய 1853/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.05.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) பந்தியின் கீழ் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2011 நவம்பர் 30 ஆம் திகதிய 1734/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.05.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2006 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறாகன 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) பந்தியின் கீழ் கடற்றொழில் மற்றும் நீர் வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 நவம்பர் 30 ஆம் திகதிய 1786/26 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.05.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

## 2014 யூன் 17, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3733/ '13

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலலோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சவுதி அரேபியாவில் சிரச்சேத தண்டனைக்கு உள்ளாகி உயிரிழந்த முத்தூரைச் சேர்ந்த, பராயமெய்தாத ரிஸானா நபீக் எனும் பாடசாலை மாணவியை ஏமாற்றி போலி விமானக் கடவுச் சீட்டு உள்ளிட்ட ஆவணங்களைத் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த குற்றம் காரணமாக பதிவு இரத்துச்செய்யப்பட்ட "ஒமார் ரெவல்ஸ்" எனப்படும் தொழில் முகவர் நிலையம் மீண்டும் "ஒமல்கா ரெவல்ஸ்" என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) கறைநிரல் பட்டியலில் சேர்க்கப்பட்ட "ஒமார் ரெவல்ஸ்" முகவர் நிலையத்தை அதே பணிப்பாளர் சபையின் கீழ் வேறொரு பெயரில் பதிவு செய்வதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை;

(iii) இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக மோசடி முகவர்கள் மென்மேலும் குற்றங்களைப் புரியத் தூண்டப்படுகின்றனர் என்பதையும், போலியான ஆவணங்களைத் தயாரிக்க அச்சப்படுவதில்லை என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில், இந்நிலைமையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2014 யூன் 18, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2622/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் செயற்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி வேலைத் திட்டத்துக்காக,

(i) பிரதேச செயலக மட்டத்தில் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) விடய மட்டத்தில் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வட மாகாணத்தின் அபிவிருத்திற்காக மேற்படி வேலைத்திட்டங்கள் போதுமானதா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3152/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஒலுவில் துறைமுகத்தின் மொத்த நிர்மாணச்செலவவு எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை துறைமுக அதிகாரசபையானது தொடர்ச்சியாக பணத்தை இழந்துவரும் நிலையில் இது போட்டித்தன்மையாக இருக்க முடியுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2007 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்கும் ஆண்டு அடிப்படையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முதலீட்டு மற்றும் பொது ஒதுக்குகளின் நகர்வுகளை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3213/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) கண்டி மாநகர சபையினால் சேகரிக்கப்படும் குப்பை கூளங்கள் மற்றும் திண்மக் கழிவுகள் ஹாரிஸ்பத்து பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் கொஹாகொட எனும் இடத்தில் அகற்றப்படுகின்றதென்பதையும்;

(ii) இக்கழிவுகள் மகாவலி கங்கையில் சேர்வதால் பிரதேச மக்களின் குடி நீர் மாசடைதல் மற்றும் துர்வாடை காரணமாக பிரதேசவாசிகள் பலவித நோய்களுக்கு ஆளாகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கண்டி மாநகர சபையினால் கழிவுகளை முறைப்படி முகாமை செய்து இதை ஒரு வளமாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3447/ '13

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்காக பூர்த்தி செய்திருக்கவேண்டிய குறைந்தபட்ச தகைமைகள் யாவை;

(ii) வடமத்திய மாகாணத்தின் ஒவ்வொரு கல்வி வலயத்திலும் சேவையாற்றுகின்ற வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் கல்வித் தகைமைகள் தனித்தனியாக யாவை;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இன்றி சேவையாற்றுகின்ற வலயக் கல்விப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இவர்களின் பெயர்கள் மற்றும் சேவையாற்றுகின்ற கல்வி வலயங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடமத்திய மாகாணத்தில் சேவையாற்றுகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I, II, மற்றும் III ஆம் தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் தற்போது சேவையாற்றுகின்ற இடங்கள் யாவை;

(iii) இலங்கை கல்வி நிர்வாகச் சேவைத் தகைமைகள் இன்றி மேற்படி மாகாணத்தில் சேவையாற்றுகின்ற வலயக் கல்விப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இவர்களின் பெயர்கள் மற்றும் சேவையாற்றுகின்ற கல்வி வலயங்கள் யாவை;

(v) மேற்படி பதவிக்கு தகைமைகளற்ற ஆட்கள் நியமிக்கப்பட்டமையின் அடிப்படை யாது;

(vi) தகைமைகளற்ற ஆட்கள் தமக்கு உரித்தற்ற பதவிக்கு மேலே குறிப்பிட்டவாறு நியமனம்பெற்று முறைகேடான விதத்தில் கொடுப்பனவுகளைப் பெற்றிருப்பின் அப்பணத்தை மீளஅறவிட நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3688/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— கலாசார, கலை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 மற்றும் 2012 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குமென ஒரு அரச நாடக விழாவே நடாத்தப்பட்டதென்பதையும்;

(ii) ஆண்டுதோறும் நடாத்தப்படவேண்டிய மேற்படி விழா, மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தப்பட்டமைக்கு நிதி இன்மையே காரணமாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடாத்தப்பட்ட அரச நாடக விழாவுக்கென ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை செலவிடப்பட்ட விதம் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அரச அனுசரணையுடன், தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச அரங்கேற்றக்கலை மண்டபத்தில் நடாத்தப்பட்ட "மஹ சமயம" நிகழ்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பணத் தொகை கிடைத்த விதம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சியின் ஒவ்வொரு நடவடிக்கைக்கெனவும் குறித்த பணத் தொகை செலவிடப்பட்ட விதம் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4313/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வன சீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) உடவளவை, யாலை, வில்பத்து, வஸ்கமுவ, கல்கமுவ மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்கள் தொடர்ந்தும் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு ஆளாகின்றார்கள் என்பதையும்;

(ii) காட்டு யானைகளினால் இடம்பெறுகின்ற தொந்தரவுகளிலிருந்து மேற்படி பிரதேச மக்களை பாதுகாப்பதற்கான தீர்வொன்றாக 2002 ஆம் ஆண்டு முதல் மின்சார வேலிகளை பராமரித்தல், காட்டு யானைகளை விரட்டுதல், வேட்டையாடுவோர் மற்றும் வேட்டை இறைச்சிகளை விற்பனை செய்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்துதல் ஆகிய நடவடிக்கைகளுக்காக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தில் சேவையாற்றும் பொருட்டு ஆட்கள் அமய ஊழியர்களாக ஆட்சேர்க்கப்பட்டார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (ii) இற்கு அமைய ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2013.01.01 ஆம் திகதி முதல் மேற்படி ஊழியர்களின் சேவை இடைநிறுத்தப் பட்டுள்ளதன் காரணமாக குறித்த பிரதேசங்களில் காட்டு யானைகளினால் இடம்பெறுகின்ற விபத்துக்கள் மீண்டும் அதிகரித்துள்ளதையும், தொழிலை இழந்துள்ள மேற்படி ஆட்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கி உள்ளதையும் ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஊழியர்களுக்கு மீண்டும் சேவையைப் பெற்றுக் கொடுத்து நிரந்தர சேவையில் அமர்த்தி மேற்படி பிரதேசங்களில் காணப்படுகின்ற காட்டு யானைகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4318/'13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாண மக்களின் எழுத்தறிவு தொடர்பாக இறுதியாக ஆய்வு நடாத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) கிழக்கு மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் எழுத, வாசிக்க ஆற்றலுள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் சனத்தொகையின் சதவீதம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் 10 வயது வரையிலான சிறார்களில் ஆரம்பக் கல்விக்கு ஆற்றுப்படுத்தப்படாத சிறார்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே வினவப்பட்டுள்ள புள்ளிவிபர பெறுமானங்கள் போதிய மட்டத்தில் உள்ளதென கல்வி அதிகாரிகள் ஏற்றுக்கொள்கின்றார்களா என்பதையும்;

(ii) எழுதுவதற்கும், வாசிப்பதற்குமான ஆற்றல் குறைவடைவதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ள காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிலைமையை மாற்றுவதற்காக செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4413/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குடிநீர் கருத்திட்டங்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக நீர் வழங்குவதற்காக மாஓயாவின் நீரைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் மாவனெல்லை நகருக்கு அருகே மேற்படி சிற்றாறுக்கு குறுக்காக நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நீர்த்தேக்க கருத்திட்டத்தின் நிர்மாணிப்பை துரிதமாக ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்குச் செலவாகும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணத் தொகையை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்ற முறையியல் யாது என்பதையும்;

(iv) கடன் உதவியாக மேற்படி பணத் தொகை பெற்றுக் கொள்ளப்படுமாயின், கடன் வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கடன் தொகையைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனம் யாதென்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தை அமுல்படுத்த எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4433/ '13

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்திய பாதுகாப்பு அமைச்சரால் லோக் சபாவில் வெளியிடப்பட்ட கூற்றுக்கு அமைவாக இந்தியா இலங்கையிலிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி ஆயுத கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்ட திகதி தென்பதையும்;

(iii) இந்தியாவினால் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட ஆயுத வகைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஆயுத விற்பனையின் மூலம் இலங்கைக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கொடுக்கல் வாங்கலின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துகின்ற அறிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4587/ ’13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பில் பல சூதாட்ட விடுதிகள் (கசினோ) இயங்குகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2013.11.29 இலுள்ளவாறு கொழும்பில் இயங்கிய சூதாட்ட விடுதிகளின் எண்ணிக்கையினையும் அவற்றின் பதிவுசெய்யப்பட்ட பெயர்களையும்;

(ii) 2006 முதல் 2012 வரையான ஆண்டுகளிலும் 2013 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் இவை ஒவ்வொன்றும் செலுத்த வேண்டிய வருடாந்த வரிகள், அறவீடுகள் மற்றும் ஏனைய சகல கட்டணங்களையும்;

(iii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதிகளில் மேற்படி சூதாட்ட விடுதி ஒவ்வொன்றும் செலுத்திய வருடாந்த வரிகள்,அறவீடுகள் மற்றும் ஏனைய சகல கட்டணங்களையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4749/ ’14

கௌரவ அசோக் அபேசிங்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய அரசினால் பராமரிக்கப்படும் வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(ii) மாகாண சபைகளால் பராமரிக்கப்படும் வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) பிரதேச சபைகளால் பராமரிக்கப்படும் வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மத்திய அரசினால் பராமரிக்கப்படும் தற்போது காபட் இடப்பட்டுள்ள வீதிகளின் நீளம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2627/ ’12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) 2005 முதல் 2011 ஆம் ஆண்டு வரை கடற்றொழில் துறைக்காக வருடாந்தம் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட பணத் தொகை அந்தந்த வகைகளுக்கு போதுமானதாக அமைந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3149/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் பெறப்பட்டுள்ள அனைத்து கடன்களினதும் மீளச் செலுத்தல் காலத்தை கடன்களுடன் வருடவாரியாகவும்;

(ii) எவ்வாறு வருமானம் ஈட்டப்பட்டு கடன்கள் மீள்செலுத்தப்படும் என்பதை உள்ளடக்கிய காசுப் பாய்ச்சல் கூற்றுக்களையும்;

(iii) அரசாங்கம் பழைய கடன்களை செலுத்துவதற்காக மேலும் கடன் பெறப் போகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் கூறப்பட்டுள்ள காலத்தில் பெறப்பட்ட கடன்களுக்கான செலவினத்தை விட வருமானத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பையும்;

(v) நாடு கடன் பொறியொன்றை நோக்கிச் செல்கின்றதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரசாங்கக் கடன்கள், அரசாங்க முறிகள் போன்றவற்றின் மூலம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமாக கடன் பெற்றுள்ள சந்தர்ப்பங்களையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3218/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் கலகெதர தும்பனே பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களும் திண்மக் கழிவுப்பொருட்களும் பூஜாபிட்டிய பிரதேச சபைக்குச் சொந்தமான திக்ஓயவத்த எனும் காணியில் இடப்படுவதென்பதையும்;

(ii) அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் அப் பிரதேசத்தில் நீருடன் கலக்கின்றமையால் சுற்றிலுமுள்ள மக்கள் நோய்வாய்ப்படுகின்றனர் என்பதையும்;

(iii) கழிவுப் பொருட்கள் இவ்விடத்தில் இடப்படுவதை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ள போதிலும் இற்றை வரை தீர்வொன்று கிடைக்கவில்லையென பிரதேசத்தில் வாழும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனரென்பதையும்;

(iv) குப்பை கூளங்கள் ஏற்றிச் செல்லப்படுவதால் சுற்றுபுறத்திலுள்ள பல வீதிகள் தற்போது சேதமடைந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கழிவுப் பொருட்களை ஏற்றிச் செல்வதால் சேதமடைந்துள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அகற்றப்படும் கழிவுப் பொருட்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் இடப்படுவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3701/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசாங்கத்துக்கு வரி செலுத்துகின்ற அரச மற்றும் தனியார் எரிபொருள் சந்தைப்படுத்தல் கம்பனிகள் யாவை;

(ii) கடந்த 10 வருட காலப் பகுதியினுள் மேற்படி ஒவ்வொரு கம்பனியும் வருடாந்தம் செலுத்திய வரியின் அளவுகள், ஒவ்வொரு வகை வரிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) வரி செலுத்துகையில் ஏதேனும் ஒரு கம்பனிக்கு ஏதேனும் வரி விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், மேற்படி கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(v) இத்தகைய வரிச் சலுகையை வழங்குவதற்கான காரணங்கள் யாவை;

(vi) கடந்த பத்து வருட காலப் பகுதியினுள் மேற்படி வரி விடுவிப்பு வழங்கப்பட்டமையின் காரணமாக இலங்கை அரசாங்கம் இழந்துள்ள வரித் தொகை ஒவ்வொரு வகை வரிக்கும் ஏற்ப வருடாந்தம் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2014 யூன் 19, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2642/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு பொருத்தமான பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக ஒரு குடும்பத்திற்கு ரூபா 2 இலட்சத்தை விஞ்சாத கடன்தொகையொன்றை சலுகை வட்டி அடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்கடன்தொகை வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3236/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை மத்திய வங்கி தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் தொழில் புரியும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அது மிகை ஊழியர்களை கொண்டுள்ளதா அல்லது குறைவான ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஒரு ஊழியருக்கான செலவினம் மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுங்கால நடுத்தர மற்றும் நீண்டகால கடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3591/ '13

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையினுள் தற்போது பயன்படுத்தப்படுகின்ற தொலைபேசிகளின் எண்ணிக்கை நாட்டின் மொத்த சனத்தொகையை விட அதிகமாகுமென வெளிவந்துள்ள அறிக்கைகளை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) தற்போது நாட்டில் பயன்படுத்தப்படுகின்ற செல்லிடத் தொலைபேசிகள் மற்றும் நிலையான தொலைபேசிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005ஆம் ஆண்டு முதல் இற்றை வரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள செல்லிட மற்றும் நிலையான தொலைபேசிகளின் எண்ணிக்கை;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட நாடுகளின்படி அத் தொலைபேசிகளின் எண்ணிக்கை;

(iii) அதற்காக செலவிடப்பட்ட மொத்த வெளிநாட்டுச் செலாவணித் தொகை

வருட ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சென்மதி நிலுவைப் பத்திரத்தின் பற்றாக்குறையில் தொலைபேசி இறக்குமதிக்காக செலவிடப்படும் வெளிநாட்டுச் செலாவணி பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிலைமையை கட்டுபடுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) நாட்டினுள் தரக்குறைவான தொலைபேசிகள் இறக்குமதி செய்யப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) அதனை நிறுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3699/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2013 பெப்ரவரி மாதத்தில் ஒரு மெட்றிக் தொன் பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்ட சராசரி விலை (CIF VALUE);

(ii) மெட்றிக் தொன் ஒன்றில் அண்ணளவாக அடங்கும் பெற்றோல் லீற்றர்களின் எண்ணிக்கை;

(iii) இதற்கமைய, 2013 பெப்ரவரி மாதத்தில் துறைமுகத்திலிருந்து இறக்குகையில் நிலவிய ஒரு லீற்றர் பெற்றோலின் சராசரி விலை;

(iv) ஒரு லீற்றர் பெற்றோலுக்காக அரசாங்கம் அறவிடும் ஒவ்வொரு வரியினதும் அளவுகள்;

(v) ஒரு லீற்றர் பெற்றோலிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெறுகின்ற இலாபம்;

(vi) ஒரு லீற்றர் பெற்றோலை விநியோகிப்பதற்கான செலவு மற்றும் விற்பனையின் மூலம் எரிபொருள் நிரப்பும் நிலையம் பெறும் இலாபம்;

எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3827/ '13

கௌரவ பி. ஹரிசன்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் ஹொரவப்பொத்தானை பிரதேச செயலாளர் பிரிவில், தியதித்த வாவி வீதியில் வீடமைப்புத் திட்டமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதில் வீடொன்றை நிர்மாணிப்பதற்கு, வீடு பெறுனர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குறித்த பணத்தொகை உதவியாகவா அல்லது கடன் தொகையாகவா வழங்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வீடு பெறுனர்களுக்கு,

(i) வழங்கப்பட்டுள்ள காணித் துண்டின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) குறித்த காணிகளின் அறுதியுரிமை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி வீடமைப்புத் திட்டத்தில்,

(i) நிர்மாணிக்கப்பட்டுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இன்றளவில் குடியமர்வுக்கென வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் குடியமராதுள்ள வீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4335/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I, II, மற்றும் III இல் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்கள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு III இற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படுகின்ற திறந்த போட்டிப் பரீட்சை இறுதியாக நடாத்தப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அலுவலர்கள் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iv) அச்சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட நியமனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி நியமனங்களைப் பெற்ற அலுவலர்களிடையே காணப்பட்ட பெண் அலுவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு III இற்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை இறுதியாக நடாத்தப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) இன்றேல், அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4508/ '13

கௌரவ அப்துல் ஹலீம்,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த பதினைந்து வருடங்களுக்கு அண்மித்த காலத்தில் இருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் மழை காரணமாக அக்குரண நகரம் நீரில் மூழ்கியதென்பதையும்;

(ii) நகரம் நீரில் மூழ்கியமை காரணமாக வர்த்தக நிலையங்களுக்கும் நகரவாசிகளுக்கும் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அக்குரண நகரம் நீரில் மூழ்கிய சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணம் – கண்டி வீதியை (A9) பயன்படுத்த இயலாமல் போகின்றதென்பதையும்;

(iv) 1997 ஆம் ஆண்டில் அக்குரண நகரம் நீரில் மூழ்கிய வேளையில் உத்தியோகத்தர்களின் அறிவுரைகளுக்கிணங்க நகரத்தினூடாக செல்கின்ற கால்வாய்க்கு இடையூறான விதத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடங்களின் பகுதிகள் அகற்றப்பட்டனவென்பதையும்;

(v) அக்குரண பெரிய பள்ளிவாசல் மற்றும் பகுதிவாழ் மக்களின் உதவியுடன் கிட்டத்தட்ட ரூபா 5 மில்லியன் செலவில் மேற்படி கால்வாயின் வண்டல் படிவுகள் இரண்டு தடவைகள் அகற்றப்பட்டனவென்பதையும்;

(vi) அத்துடன் கால்வாய்க்கு பக்கத்தில் இருந்த அனைத்து மரஆலைகளும் அகற்றப்பட்டனவென்பதையும்;

(vii) ஆயினும், 2013 ஒக்டோபர் மாதம் 31 அம் திகதி பெய்த மழையினால் அக்குரண நகரம் மீண்டும் நீரில் மூழ்கியதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) அக்குரண நகரம் நீரில் மூழ்கும் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மத்திய அமைச்சின் தலைமையில் ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்களையும் இணைத்துக்கொண்டு ஏதேனும் ஆய்வினைச்செய்து நிலைபேறான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4588/ '13

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூதாட்ட விதிப்பனவு மற்றும் பிற தொடர்புடைய வரிகளின் கொடுப்பனவுக்காக "மெரினா கொழும்பு" என்ற பெயரில் அல்லது இதே போன்ற ஒரு பெயரில் ஒரு கசினோ பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அது முதல் முறையாக எப்போது பதிவு செய்யப்பட்டது என்பதையும்; மற்றும்

(iii) மேற்படி கசினோ எந்தப் பெயரின் (தனிநபர் அல்லது நிறுவனம்) கீழ் பதிவு செய்யபட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4598/ '13

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்தில், புத்தளம் கல்வி வலயத்திற்கு உரித்தான வமே/பு/ கொய்யாவடி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கும், ஆரம்ப பிரிவுக்கும் தேவையான ஆசிரியர்கள் இல்லை என்பதையும்;

(ii) இந்நிலைமை மேற்படி பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு தடையாகும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களை உடனடியாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4652/ '13

கௌரவ அஜித் மான்னப்பெரும,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான கம்பஹ மாவட்டம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் உள்ள டிப்போக்களிலும் வேறு நிலப் பரப்புகளிலும் சேவையில் ஈடுபடுத்தாது தரித்து வைக்கப்பட்டுள்ள பேருந்து வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பேருந்து வண்டிகளை சேவையிலிருந்து ஒதுக்கிவைக்கப் பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இவற்றில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலைமையில் உள்ளவற்றின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்கூறப்பட்டவாறு சேவையில் ஈடுபடுத்தக்கூடிய பேருந்து வண்டிகள் திருத்தப்பட வேண்டியிருப்பின், இதற்காக செலவாகும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4752/ '14

கௌரவ அஷோக் அபேசிங்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மல்லவபிட்டி தொடக்கம் ரிதீகம வரையிலான வீதியை காபட் இட்டு அபிவிருத்தி செய்வாரா என்பதையும்;

(ii) இதற்காக எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2647/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலை நோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளதற்கமைய நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருக்கும் காணிகளற்ற அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்காக 10 பேச் அளவுக்கும் குறையாத 25,000 காணித்துண்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இன்றளவில் மேற்கூறியவாறு காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3237/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) லங்கா சதொச தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் தொழில் புரியும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அது மிகை ஊழியர்களை கொண்டுள்ளதா அல்லது குறைவான ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஒரு ஊழியருக்கான செலவினம் மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுங்கால நடுத்தர மற்றும் நீண்டகால கடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3651/ '13

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெலிபிட்டிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகள் மீட்கப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மேற்படி பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் அனுமதியின்றி மீட்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற காணி மீட்புகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்

(iv) ஆமெனில், கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை வெலிபிட்டிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வயற் காணிகளை மீட்பதற்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மீட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வயற் காணிகளை மீட்பதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3714/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சனாதிபதி நிதியத்தினால் கல்வி நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக தகுதிவாய்ந்தவர்களைத் தெரிவு செய்த அடிப்படை யாது என்பதையும்;

(ii) இதற்கமைய கடந்த 03 வருட காலப்பகுதியில் கல்வி நிதி உதவி வழங்க தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி உதவி பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட உதவித் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2014 யூன் 20, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2652/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மகிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலை நோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய 25 பிரதான நகரங்களில் தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், தாபிக்கப்பட்டுள்ள மேற்படி தகவல் தொழில்நுட்ப நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதான நகரத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3240/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தொடர்பாக,

(i) 2012 ஆம் ஆண்டுக்கான மற்றும் இற்றை வரைக்குமான இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபம் அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) இந் நிறுவனத்தில் தொழில் புரியும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) இந்நிறுவனத்தில் மிகை ஊழியர்களை கொண்டுள்ளதா அல்லது குறைவான ஊழியர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஒரு ஊழியருக்கான செலவினம் மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுங்கால நடுத்தர மற்றும் நீண்டகால கடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3264/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கெட்பதற்கு,— (3)

(அ) (i) கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக 2012 ஓகத்து மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி நிலையங்களால் விநியோகிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்காக விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை, அதற்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கை, சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கொரிய அரசின் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றோரின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2011 ஆம் ஆண்டு கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டுக் கடவுச் சீட்டு கட்டாயமாக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3652/ '13

கௌரவ புத்திக பத்திரண,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹபரனை மற்றும் உடவளவை பிரதேசங்களிலிருந்து பிடிக்கப்பட்ட சுமார் 20 குட்டி யானைகள் சட்ட விரோதமான முறையில் பல்வேறு வர்த்தகர்கள், ஆலயங்கள் மற்றும் விஹாரைகளின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதற்கு எதிராக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) "பழக்கப்பட்ட யானைகளின் சங்கம்" எனும் பெயரில் கம்பனியொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இச்சங்கத்தின் உத்தியோகத்தர்கள் யானைகளை தங்களுடைய பொறுப்பில் வைத்துக்கொண்டு சமூகத்திற்கு தவறான முன்மாதிரிகளை வழங்குகின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(iii) பழக்கப்பட்ட யானைகள் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் தங்கள் பொறுப்பில் யானைகளை வைத்துக்கொள்வதை ஒரு மோசடி வியாபாரமாக செய்துவருவதால், இது பற்றி முறைசார்ந்த விசாரணையொன்றை நடாத்தி இந்நிலையை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3709/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் சனாதிபதியவர்களுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இன்றைய சனாதிபதியவர்களின் கீழ் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ள துறைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஆலோசகர்களுக்காக கடந்த 3 வருடங்களினுள் ஏற்கப்பட்ட செலவினங்கள் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி செலவினங்களுடன் ஒப்பிடுகையில் மேற்படி ஆலோசகர்கள் போதியளவு கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4163/ '13

கௌரவ பி. ஹரிசன்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011.11.26 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு தேதியில் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தல் தீ விபத்தொன்று ஏற்பட்டதென்பதையும்,

(ii) இத் தீ விபத்து காரணமாக அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்திலிருந்த பெருமளவு வழக்குப் பொருட்களும் ஆவணங்களும் தீக்கிரையாகின அல்லது சேதத்திற்கு உள்ளாகின என்பதையும்;

(iii) வழக்குப் பொருட்களுக்கும் ஆவணங்களுக்கும் சேதம் ஏற்பட்டதால் இந் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வந்த வழக்குகள் பல வருடங்கள் தாமதடைந்துள்ளன என்பதையும்;

(iv) இத் தீ விபத்தின் பின்னர் சில வழக்குக் கோப்புகள் காணாமல் போயுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் ஏற்பட்ட மேற்படி தீ விபத்துக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) இத் தீ விபத்துக்கு தீ மூட்டப்பட்டமையே காரணமாயிருப்பின், அதனோடு தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸ் நிலையம் யாதென்பதையும்;

(v) மேற்படி விசாரணைகளின் பெறுபேறுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4280/ '13

கௌரவ துனேஷ் கன்கந்த,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 நவம்பர் 19ஆந் திகதி தொடக்கம் 2013 ஜூன் மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியினுள் அமைச்சர்களுக்கு (அமைச்சரவை அந்தஸ்துள்ள மற்றும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத) பிரதி அமைச்சர்களுக்கு, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல்கள் தொடர்பான சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர்களின், பிரதி அமைச்சர்களின் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு அமைச்சருக்கு, பிரதி அமைச்சருக்கு மற்றும் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறிய முறைப்பாடுகள் தொடர்பாக மேற்படி ஆணைக்குழுவின் மூலம் புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொண்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை;

(iii) இதுவரை புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்படாத முறைப்பாடுகள் தொடர்பாக துரிதமாகவும் முறைசார்ந்த விதத்திலும் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

(iv) இதற்கு எவ்வளவு காலம் எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4599/ '13

கௌரவ மொஹமட் அஸ்லம்,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு நகர அபிவிருத்தி மற்றும் நகர அலங்கரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக கொழும்பு 10, மாளிகவத்தை பிளேஸ், எபல்வத்தை, ஆர். பீ. வத்தை ஆகிய இடங்களில் அமைந்துள்ள வதிவோர்களின் வீடுகளை அகற்றுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி இடங்களிலிலிருந்து இடித்து அகற்றுவதற்காக இனங்காணப்பட்டுள்ள வீடுகள் மற்றும் ஏனைய சொத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வீடுகள் மற்றும் சொத்துக்களின் உரிமையாளர்களது பெயர்கள், முகவரிகள் மற்றும் வரிப்பண இலக்கங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4660/ '13

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை வெளிப்புறச்சுற்றுவட்டப் பாதை நிர்மாணத்திற்கான கருத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(iii) கருத்திட்ட முடிவுறுத்தலுக்கென உத்தேசிச்க்கபட்ட திகதி யாதென்பதையும்

(iv) இன்றேல், சொல்லப்பட்ட கருத்திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) திருகோணமலை வெளிப்புறச்சுற்றுவட்டப் பாதைக் கருத்திட்டத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள கம்பனியின் பெயரையும்;

(ii) சொல்லப்பட்ட கம்பனிக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் மொத்தப் பெறுமதியையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்திற்கு நிதியுதவியளிக்கப்படவிருக்கும் (அதாவது, கடன் ஒன்றின் மூலமாகவா மற்றும்/ அல்லது கொடை ஒன்றின் மூலமாகவா திநியளிக்கப்படவுள்ளது) வழிமுறையையும்;

(ii) இக்கருத்திட்டத்திற்கு நிதியளிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள தரப்புகள் மற்றும் ஒவ்வொரு தரப்பினாலும் நிதியளிக்கப்பட்ட தொகை பற்றிய விபரங்களைத் தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2660/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப் பட்டுள்ளதன் பிரகாரம் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட ஒவ்வோர் உயர்கல்வி நிறுவனத்திலும் சகல வசதிகளையும் கொண்ட முழுமையான மொழியாய்வு கூடங்கள் தாபிக்கப்பட்டுள்ளனவாவென்பதையும்;

(ii) ஆமெனில் மேற்படி மொழியாய்வு கூடங்களைத் தாபித்தல் சம்பந்தமான விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3241/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பாக,

(i) 2012ஆம் ஆண்டிற்கான மற்றும் இற்றை வரையான இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(ii) 2015 - 2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தை அல்லது நட்டத்தையும்;

(iii) இன்றுள்ளவாறான மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(iv) நிறுவனத்தில் தொழில்புரியும் நபர்களின் எண்ணிக்கையையும்;

(v) அந்நிறுவனத்தில் மிகை பணியாளர்களா அல்லது குறை பணியாளர்களா உள்ளனர் என்பதையும்;

(vi) ஊழியர் ஒருவருக்கான செலவு மற்றும் ஊழியர் ஒருவருக்கான இலாபத்தையும்;

(vii) இன்றுள்ளவாறு வங்கி மேலதிகப் பற்றுகளுடன் குறுகிய காலப் படுகடன், நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன்கள் ஆகியவற்றின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3653/ '13

கௌரவ புத்திக பதிரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் வில்பத்து தேசிய வனப்பூங்காவுடன் இடையறாது இணைந்துள்ள வீரக்குளிச்சோலை – எழுவான்குளம் உத்தேச வன ஒதுக்கத்திற்கு சொந்தமான தப்போவ சரணாலயத்துடன் இணைந்ததாக அமைந்திருக்கும் 250 ஏக்கர் நிலப்பரப்பு தற்போது எச்.வீ.ஏ.பாம் நிறுவனத்தினால் பெக்கோ இயந்திரத்தைக் கொண்டு துப்புரவாக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) அரசாங்கத்திற்கு சொந்தமான இந்த வனப் பரப்பிற்கு போலியான உறுதியொன்று தயாரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இந்த வனப்பரப்பிற்காக தயாரிக்கப்பட்ட போலி உறுதிக்கு வனாத்தவில்லுவ பிரதேச செயலாளர் சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனம் வனப் பிரதேசத்தில் மேற்கொண்டு வருகின்ற நிர்மாணிப்புகளுக்கு சட்டரீதியான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) வனசீவராசிகள் மற்றும் தொல்பொருளியல் ஒதுக்கங்கள் அமைந்துள்ள இப்பிரதேசத்தில் எச்.வீ.ஏ. பாம் நிறுவனம் பேணிவரப்படுகின்றமையால் பெரும் சுற்றாடல் சேதம் ஏற்படுபடுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், ,இந்நிலையை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3718/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த நான்கு வருட காலப்பகுதியில் ஒவ்வொரு போகத்திலும் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மொத்த நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நெல்லின் அளவானது ஒவ்வொரு போகத்திற்குமான மொத்த உற்பத்தியில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iii) கடந்த வருடம் நெல் கொள்வனவுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கடந்த நான்கு வருட காலப்பகுதியில் நெல் கொள்வனவுக்காக பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட விதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஒவ்வொரு போகத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விற்பனை செய்யப்பட்ட விலைகள், கொள்வனவு செய்த நபர்கள் மற்றும் அந்த ஒவ்வொரு நபரும் கொள்வனவு செய்த அளவு தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி நெல் கொள்வனவின் ஊடாக பெறப்பட்டுள்ள இலாபம்/ நட்டம் வருடாந்தம் தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) நட்டம் ஏற்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4164/ '13

கௌரவ பி. ஹரிசன்,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள ஆயுர்வேத மருத்தவர்கள் உள்ளடங்கும் வகுதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு வகுதிக்கும் உரிய மருத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்த வகுதிகளிலுள்ள பொது வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலத்தினுள் ஆயுர்வேத திணைக்களத்தினால் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள மொத்த உடல் பிடித்துவிடும் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வெண்ணிக்கை மற்றும் அவற்றின் முகவரிகள் மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி உடல் பிடித்துவிடும் நிறுவனங்களை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள மருத்துவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) ஆயர்வேத திணைக்களத்திற்கு மேலதிகமாக வேறு நிறுவனங்களினால் உடல் பிடித்துவிடும் நிறுவனங்களை நடாத்துவதற்கான உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பின், அந்நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஆயுர்வேத உடல் பிடித்துவிடும் நிறுவனமொன்றை நடாத்துவதற்கு இருக்க வேண்டிய ஆகக்குறைந்த தொழில்சார் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறானதொரு நிலையமொன்றை நடாத்தும் இடமொன்றில் இருக்க வேண்டிய தரநியமங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4661/ '13

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியாவில் கடல் மட்டத்திலிருந்து மிகவுயரமாக அமையும் விளையாட்டுத் தொகுதியின் நிர்மாணத்திற்கு கேள்விப் பத்திரம் கோரப்பட்டது எப்போதென்பதையும்;

(ii) மேற்சொன்ன விளையாட்டுத்தொகுதியை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்ட கம்பனியின் பெயரையும்;

(iii) மேற்சொன்ன கம்பனியை இந்நிர்மாணத்திற்காக தெரிவுசெய்தமைக்கான காரணங்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நுவரெலியாவில் கடல் மட்டத்திலிருந்து மிகவுயரமாக அமையும் இவ் விளையாட்டுத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தின் மொத்தச் செலவையும்;

(ii) இக்கருத்திட்டத்திற்கு நிதியளிப்பு செய்யவுள்ள தரப்பின் அல்லது தரப்பினரின் பெயரையும்/பெயர்களையும்;

(iii) நிதியிடலில் ஒன்றுக்கு மேற்பட்ட தரப்பினர் ஈடுபட்டுள்ளனர் எனின், அத்தரப்பினர் நிதியளிப்பை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
## (2014 யூன் 20, வெள்ளிக்கிழமை)

2905/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) சுதந்திரம் பெற்றதிலிருந்து இற்றைவரை இலங்கையை மாறி மாறி ஆட்செய்துகொண்டு வருகின்ற அரசாங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்படும் ஒவ்வொரு அரசாங்கத்தினதும் அமைச்சரவையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக ஆரம்பம் முதல் முடிவு வரை எத்தனை என்பதையும்;

(iii) 1985, 1995, 2005 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு அமைச்சருக்குமான சராசரிச் செலவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மாகாண சபைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளவாறு அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை சட்டத்தின் மூலம் ஏன் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதையும்;

(ii) அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பு நாட்டுக்கு உதவியுள்ளதா அல்லது நாட்டின் மீது மேலும் சுமையைச் சுமத்தியுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---